COVAX உலகிற்கு கொவிட்-19 தடுப்பூசிகளை வழங்குகிறது

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவர், அலைனா பி. டெப்லிட்ஸ் மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர், சாரா ஹுல்டன் ஆகியோர்களால்

இந்த உலகளாவிய நெருக்கடியினை எந்தவொரு நாடும் தனியாக எதிர்கொள்ள முடியாது என்பதை கொவிட்-19 நமக்குக் கற்றுத்தந்துள்ளது. பெருந்தொற்று தொடர்ந்து கொண்டிருக்கும் மற்றும் வைரஸின் புதிய திரிபுகள் உருவாகிக் கொண்டிருக்கும் இந்நிலையில், சர்வதேச சமூகம் இயலுமானவரை விரைவாக, இயலுமானவரை அதிகமான மக்களுக்கு தடுப்பூசி ஏற்றுவது மிகவும் முக்கியமாகும். கவி(Gavi), தடுப்பூசி கூட்டணி, பெருந்தொற்று தயார்நிலை கண்டுபிடிப்புக்கான கூட்டணி (CEPI) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகிவற்றின் இணைத்-தலைமையுடன் செயற்படும் COVAXஆனது, பாதுகாப்பான, செயற்திறனுடைய மற்றும் உயர்தர கொவிட்-19 தடுப்பூசிகள் தொடர்பான ஆராய்ச்சி, விருத்தி மற்றும் சமமான உலகளாவிய விநியோகத்தை துரிதப்படுத்தும் ஒரு உலகளாவிய முன்முயற்சியாகும். இலங்கைக்கு அனுப்பப்பட்ட கிட்டத்தட்ட 2 மில்லியன் தடுப்பூசி மருந்துகள் உட்பட COVAX ஏற்கனவே 152 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகளை 137 பங்கேற்பாளர்களுக்கு அனுப்பியுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில், உலகம் முழுவதும் 2 பில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகளை விநியோகிப்பதை COVAX இலக்காகக் கொண்டுள்ளது. மேலும் இந்த மருந்தளவுகளில் ஒவ்வொன்றும் நன்கொடையாளர்களால் நிதியுதவியளிக்கப்பட்ட COVAX உயர் சந்தைப்படுத்தல் உறுதிப்பாடு (Advance Market Commitment - AMC) மூலமாக, இலவசமாக இலங்கை போன்ற 92 கீழ் மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளை அடையும்.

பாதுகாப்பான மற்றும் செயற்திறனுடைய தடுப்பூசிகளை விரைவாக உருவாக்கி விநியோகிப்பதன் முக்கியத்துவத்தை கொவிட் -19 தெளிவுபடுத்தியுள்ளது. கடந்த சில தசாப்தங்களாக விஞ்ஞானம் மற்றும் உயிரியல் மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு நிதியளிப்பதற்காக எமது அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட இணைந்த மற்றும் குறிப்பிடத்தக்க முதலீடுகள் மற்றும் உயிரியல் தொழிநுட்ப நிறுவனங்கள், மருந்தாக்கல் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் தடுப்பூசி ஆராய்ச்சிகளுக்கு நிதியளிப்பதற்கான எமது உறுதிப்பாடு என்பன, பாதுகாப்பான

மற்றும் மிகவும் பயனுள்ள தடுப்பூசிகள் ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்குள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்தன. அது எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றிய, சாதனைகளை முறியடித்த ஒரு வெற்றியாகும். இந்த பாதுகாப்பான, செயற்திறனுடைய மற்றும் உயர்தர தடுப்பூசிகள் இப்போது உலக சமுதாயத்திற்கு பெருமளவில் COVAXஇன் பங்களிப்புடன் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஜூன் 2021 இல், ஜி7 தலைவர்கள், எதிர்காலத்தில் தொற்றுநோய்ப் பரவல்களை எதிர்கொள்ளும்போது பயன்படுத்தக்கூடிய பாதுகாப்பான மற்றும் செயற்திறனுடைய தடுப்பூசிகளின் ஆராய்ச்சி, உருவாக்கம், பாரியளவிலான உற்பத்தி மற்றும் விநியோகத்தை விரைவுபடுத்துவதற்கான "100 நாள் செயற்பணிக்கு" உறுதியளித்துள்ளனர்.

30 இற்கும் மேற்பட்ட நாடுகளின் நிதி உதவியைப் பெற்றுள்ள, நன்கொடையாளர்களின்-நிதியுதவியில் இயங்கும் முன்முயற்சியான COVAX AMCயானது, குறைந்த மற்றும் கீழ்-நடுத்தர வருமானப் பொருளாதாரங்களுடைய நாடுகளுக்கு பாதுகாப்பான மற்றும் செயற்திறனுடைய தடுப்பூசிகளின் விநியோகத்தை விரைவுபடுத்துவதில் முக்கியமானது.

ஐக்கிய அமெரிக்காவும், ஐக்கிய இராச்சியமும் முறையே 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் 548 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்களை வழங்குவதற்கு உறுதியளித்து உலகளாவிய நன்கொடைகளை ஸ்திரப்படுத்துவதற்கு உதவின. அதனாலேயே, ஏப்ரல் மாதத்தில், COVAX AMC இற்காக 386 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் திரட்டிய “One World Protected” எனும் மெய்நிகர் நிகழ்வை கவியுடன் (Gavi) இணைந்து நடாத்துவதில் அமெரிக்கா பெருமிதம் கொண்டது. COVAX AMC மூலம் பாதுகாப்பான மற்றும் செயற்திறனுடைய தடுப்பூசிகளின் சமமான உலகளாவிய விநியோகத்திற்கு உதவிசெய்வதற்காக, நன்கொடையாளர்கள் கூட்டாக 9.6 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான நிதியை உறுதியளித்துள்ளனர்.

சர்வதேச ஒத்துழைப்பு, தாராள மனப்பான்மை மற்றும் மருத்துவ கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் இந்த அசாதாரண கலவையானது, உயிர் காக்கும் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய இயலாத நாடுகளும் தங்கள் குடிமக்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதை உறுதி செய்கிறது. ஏனெனில், கொவிட்-19 இலிருந்து அனைவரும் பாதுகாப்பாக இருக்கும் வரை யாரும் கொவிட் -19 இலிருந்து பாதுகாப்பாக இல்லை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்

COVAX AMC ஊடாக இலங்கைக்கு 8.4 மில்லியன் தடுப்பூசி மருந்துகள் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் முதல் தொகையாக 264,000 தடுப்பூசி மருந்துகள் மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வந்தது. அமெரிக்கா தனது சொந்த விநியோகத்திலிருந்து 80 மில்லியன் தடுப்பூசிகளை உலகின் பிற பகுதிகளுக்கு வழங்குவதாக உறுதியளித்த பிறகு, ஜூலை 15 அன்று மேலதிகமாக 1.5 மில்லியன் மொடர்னா தடுப்பூசி மருந்துகள் கொழும்புக்கு வந்தது. இன்னும் அதிகம் வரவிருக்கிறது.

இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜோன்சன், ஜூன் 2021 இல், G7 உச்சிமாநாட்டை நடத்தியபோது, இங்கிலாந்து, உலகின் ஏழை நாடுகளுக்கு, செப்டம்பர் 2021 இறுதிக்குள் வழங்கப்படும் 5 மில்லியன் உட்பட, மேலதிக 100 மில்லியன் மிகை தடுப்பூசி மருந்துகளை பன்னிரண்டு மாதங்களுக்குள் வழங்குமென அறிவித்தார். "எமது சில மிகை மருந்துகளை தேவைப்படுபவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நிலையில் நாம் இப்போது இருக்கிறோம். அவ்வாறு செய்வதன் மூலம் இப்பெருந் தொற்றினை நிரந்தரமாக வெல்ல நாம் ஒரு பாரிய நடவடிக்கையினை எடுப்போம்." என இங்கிலாந்து பிரதமர் கூறினார். ஒட்டுமொத்தமாக, G7+ தலைவர்கள் 1 பில்லியன் தடுப்பூசி மருந்துகளை நன்கொடையளிக்க உறுதியளித்தனர்.

ஜூன் 2022இற்குள், 92 குறைந்த மற்றும் கீழ்-நடுத்தர வருமானம் கொண்ட AMC நாடுகள் மற்றும் பொருளாதாரங்கள் மற்றும் ஆப்பிரிக்க யூனியனுக்கு COVAX மூலம் விநியோகிப்பதற்காக அமெரிக்காவானது கவிக்கு (Gavi) 500 மில்லியன் மேலதிக கொவிட் -19 தடுப்பூசி மருந்துகளை வழங்கும். இவற்றுள், 200 மில்லியன் தடுப்பூசி மருந்துகளை 2021 இறுதியில் விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. "இப்பெருந்தொற்றினை முடிவுக்கு கொண்டுவருவதற்கு வலுவான அமெரிக்கத் தலைமை அவசியம்" என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறினார். "இந்த வைரஸுக்கு எதிரான எமது பொதுவான போராட்டத்தில் உலகின் தடுப்பூசிகளின் ஆயுதக் களஞ்சியமாக அமெரிக்கா இருக்கும்." மற்றும், " இப்பெருந்தொற்றினை முடிவுக்குக் கொண்டுவரவும், உயிர்களைக் காப்பாற்றவுமே நாம் இதைச் செய்கிறோம். அவ்வளவுதான். வேறில்லை." எனவும் ஜனாதிபதி பைடன் மேலும் தெளிவுபடுத்தினார்.

கொவிட்-19 இன் பரவலைத் தடுப்பதற்கான போராட்டத்தில், தடுப்பூசிகளுக்கான சமமான அணுகலை உறுதி செய்வதற்கு பலதரப்பு முயற்சி மிகமுக்கியமானதாகும். வரலாற்றிலேயே மிகப்பெரிய தடுப்பூசி கொள்முதல் மற்றும் விநியோக நடவடிக்கையான COVAX, அதைச் செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. எம்மில் மிகச் சிறந்தவர்களை COVAX பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சமத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுவான மனிதநேயம் ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ள அது, ஒரு உலகளாவிய சவாலுக்காக உருவாக்கப்பட்ட ஒரு உலகளாவிய தீர்வாகும். ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் பிற உலகத் தலைவர்களின் உதவியுடன் இந்த முன்முயற்சியின் வெற்றியானது, இப்பெருந்தொற்றினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் உலகெங்கிலுமுள்ள மில்லியன் கணக்கான உயிர்களைக் காப்பாற்றுவதற்குமான உலகளாவிய முயற்சியின் ஒரு மிகமுக்கிய அங்கமாகும்.